உ
சிவமயம்



அமரர்

# அப்பாக்குட்டி செல்வராசா

அவர்களின் நினைவாக மலரும்

# கவினுறு கல்வயல்

2024

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



கல்வயல், சாவகச்சேரியைச் சேர்ந்த

**அமரர் அப்பாக்குட்டி செல்வராசா**

அவர்களின் 31-ம் நாள் ஞாபகர்த்தமாக மலரும்


# கவினுறு கல்வயல்

**11-10-2024**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



தோற்றம்
29 - 07 - 1941

மறைவு
11 - 09 - 2024

அமரர்

# அப்பாக்குட்டி செல்வராசா அவர்கள்

## திதி வெண்பா

*சீரார் குரோதியிற் செப்பாரும் ஆவணியில்*
*பேரார் வளர்பிறை அட்டமியே - ஊரார்*
*உவந்திடும் செல்வராசா உத்தமன் தானும்*
*சிவகதியே சேர்ந்த திதி.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவினுறு கல்வயல்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் தென்பால் முக்கனி மரங்களின் சோலையாகவும் நெல்வயல்கள் நிறைந்த நிலமாகவும் கடல்வளம் காணப்படும் பிரதேசமாகவும் தென்மராட்சி என்னும் திவ்விய பிரதேசம் அமைந்துள்ளது. மன்னராட்சிக் காலத்தில் அரசர்கள் யாழ்ப்பாணத்தைப் பாதுகாப்பதற்காக அதன் தென்பகுதியிலும் வடபகுதியிலும் இரண்டு படைப்பிரிவுகளை நிறுவியிருந்தனர். அவற்றிற்குத் தளபதிகளையும் நியமித்து அவர்களை அப்பகுதியில் குடியமர்த்தியிருந்தனர். இவர்கள் மறவர்கள் என அழைக்கப்பட்டனர். அவ்வாறு தென்பகுதியில் நிறுவப்பட்ட படைகளின் தளபதியான மறவன் குடியிருந்த இடம் மறவன்புலவு என இன்றும் அழைக் கப்படுகின்றது. இவ்வாறாக தென்மறவன் ஆட்சிக்கு உட்பட்ட பிரதேசமானபடியால் தென்மறவர் ஆட்சி என விளங்கிப் பின்னாளில் மருவி தென்மராட்சி என்றாகியதாக அறியமுடிகின்றது. இத்தகைய சிறப்புமிக்க தென்மராட்சிப் பதியானது யாழ்நகரிலிருந்து சுமார் இருபது கிலோமீற்றர் தூரத்தில் தெற்குப் பக்கமாக இருக்கின்றது. இப்பதியின் தலைநகரமாக விளங்கும் சாவகச்சேரி நகரிலிருந்து வடக்குப் புறமாக கல்வயல் என்னும் கவினுறு பதி காணப் படுகின்றது.

## பெயர் உருவான காரணம்

இக்கிராமத்தின் ஒரு பகுதி கற்கள் நிறைந்த பூமியாகவும் மறு பகுதி வயலும் மணல்சார்ந்த பூமியாகவும் காணப்படுவதால் அதாவது கல்லும் வயலும் சேர்ந்து காணப்படுவதால் கல்வயல் என்னும் பெயர் ஏற்பட்டதாக ஒரு சாரார் தெரிவிக்கின்றனர். கல் என்னும் ஏவற்சொல் படி எனப்பொருள்படும். வயல் என்பது விளைவுகளை அறுவடை செய்கின்ற நிலப்பரப்பைக் குறிக்கும். எனவே கற்றவர்களை உருவாக்குகின்ற அல்லது அறுவடை செய்கின்ற பதியாக விளங்குவதால் கல்வயல் என்னும் இப்பெயர் ஏற்பட்டதாக இன்னொரு சாராரும் தெரிவிக்கின்றனர். அதற்கு மாறாக இன்னொரு சாரார் **"கல்விவயல்"** என்ற சொல்லிலிருந்து திரிபடைந்து காலப்போக்கில் கல்வயல் என ஆகியிருக்கலாம் எனவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுகின்றனர். எது எப்படி ஆயினும் கல்வயல் என்னும் பெயர் இற்றைவரை நிலைத்து நிற்கின்றது.

அமைவிடம்.

யாழ்ப்பாண மாவட்டத்தின் தென்மராட்சிப் பிரதேச செயலக நிர்வாக எல்லைப் பரப்பினுள் உள்ள அறுபது (60) கிராம அலுவலர் பிரிவுகளுள் ஒன்றாகக் கல்வயல் என்னும் கிராமம் இருக்கின்றது. இது சாவகச்சேரி நகரிலிருந்து வடக்குத் திசையாக தபால் நிலைய வீதியால் சுமார் ஒரு கிலோமீற்றர் தூரத்திலிருந்து ஆரம்பித்து சரசாலை கனகன்புளியடிச் சந்தியால் திரும்பி நுணாவில் கனகன்புளியடி வீதியூடாகச் சென்று துர்க்கையம்மன் வீதிவழியாக சாவகச்சேரி மகளிர் கல்லூரி வீதிக்குள் நுழைந்து மீண்டும் தபால் நிலைய வீதியில் சென்று நிறைவடைகின்ற எல்லைப் பரப்பினுள் அடங்கியுள்ளது. இக்கல்வயல் கிராம அலுவலர் பிரிவினுள் பெருங்குளம், கிராம்புவில், கெருடாவில், மாளாவளை, விளைவேலி, கற்குளி என்னும் குக்கிராமங்கள் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இக்கிராமத்தின் எல்லைகள்.

கிழக்கும் வடக்கும் :- சாவகச்சேரி - புலோலி வீதி (தபால்நிலைய வீதி)

மேற்கு :- நுணாவில் கனகன்புளியடி வீதி.

தெற்கு :- மகளிர்கல்லூரி வீதி , துர்க்கையம்மன் கோவில் வீதி என்பனவாகும்.

நிர்வாகம்.

கல்வயல் கிராமம் தென்மராட்சி பிரதேச செயலகப் பிரிவின் அறுபது கிராம அலுவலர் பிரிவில் ஒன்றாக J/305 கிராம அலுவலர் பிரிவாக நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. அத்துடன் உள்ளூராட்சி நிர்வாகத்தில் சாவகச்சேரி நகரசபையின் நிர்வாகத்தின் கீழும் இப்பகுதி நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரப்பளவும் மக்கள் தொகையும்.

இக்கிராமம் ஏறத்தாழ 3.84 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பளவைக் கொண்டது. தென்மராட்சிப் பிரதேச செயலகத்திலுள்ள 2024 ஆகஸ்ட் மாதப் புள்ளிவிபரக் கூற்றின்படி இப் பிரதேசத்தில் 649 குடும்பங்களைச் சேர்ந்த 1887 மக்கள் வாழ்கின்றனர். இவர்களில் ஆண்களின் எண்ணிக்கை 937 ஆகவும் பெண்களின் எண்ணிக்கை 950 ஆகவும் காணப்படுகின்றது. மேலும் இவர்களில் 640 குடும்பங்களைச் சேர்ந்த 1860 பேர் இந்துசமயத்தைப் பின்பற்றுபவர்களாகவும் 9 குடும்பங்களைச் சேர்ந்த 27 பேர் கிறிஸ்தவ சமயத்தைப் பின்பற்றுபவர்களாகவும் உள்ளனர். இதுதவிர வேற்று மதத்தினர் இப்பகுதியில் இல்லை.

இக்கிராம மக்களில் பெரும்பான்மையினர் சுத்த சைவ போசனம் உடையவர்களாக இருந்தனர். இப்போது இந்தநிலை அருகி வருகின்றமையும் காணக்கூடியதாகவுள்ளது.

எங்குமிலாத் தனிச்சிறப்புடன் கல்வயல்.

கல்வயல் பிரதேசம் எமது முன்னோர்களின் தீர்க்க தரிசனமான செயற்பாடுகளால் வளங்கொழிக்கும் பூமியாகக் காணப்பட்டது. மருதநிலம் சூழவுள்ள நிலப்பரப்பைக் கொண்ட புனிதமான இடம். காட்டுமரங்களும் நாட்டுமரங்களும் நிறைந்த இடம். தென்னை, பனை, மா, பலா, வாழை, கமுகு, நறுவிலி , நாகதாழி , பலாசு , தேக்கு , வேம்பு , நாவல் , கண்டல் , கொக்கட்டி , புன்னை, கூழா, அத்தி, ஆல், அரசு, வாகை, விளாத்தி, பன்னீர், பூவரசு, பாலை, முதிரை, கருங்காலி, மருது, புளி, இலுப்பை, தேத்தா, ஈஞ்சு, பணலை, கிஞ்ஞா, வில்வம், நீர்ப்பூ, நிலப்பூ, கொடிப்பூ, வெட்டொட்டி, தும்பை, ஆமணக்கு, பருத்தி, நொச்சி, துளசி, சித்தரத்தை, மெலிஞ்சி, குமிழம், பொருத்துமான் கொடி, கொவ்வை, முல்லை, முசுட்டை, மொசுமொசுக்கை, குன்றிமணி, சிறுகுறிஞ்சா, தூதுவளை, பாவட்டை, ஆடாதோடை, நெல்லி, கற்பூரவள்ளி, காத்தோட்டி, முடிதும்பை, ஊமத்தை, பிள்ளைக்கற்றாளை, முருங்கை போன்ற இன்னோரன்ன மரங்கள், செடிகொடிகள், மருத்துவச் செடிகளின் சோலையாகவும் இப்பகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கியது. காலப்போக்கில் இவற்றில் பல அழிந்தும் அழிக்கப்பட்டும் விட்டன. அத்துடன் விளைவேலி, பெருங்குளம், கிராம்புவில், மானாவளைப் பகுதிகளில் தாமரைத் தடாகங்களும் குளங்களும் சிறுசிறு துரவுகளும் காணப்பட்டன. கால்நடைகள் நீரருந்துவதற்கும் பயிற்செய்கைக்கும் இவற்றில் நீரைத் தேக்கிவைக்கும் நடைமுறையும் மக்களால் பேணப்பட்டு வந்தது.

இங்குள்ள குளங்களில் மீன்பிடித் தொழிலும் சிறிதளவில் இடம்பெற்று வந்துள்ளது. தூண்டில் போடுதல் , கரப்பு பயன்படுத்துதல் போன்ற முறைகளில் மீன்கள் பிடிக்கப்பட்டு வந்தது. இங்கு விரால் மீன் , விலாங்கு மீன் , யப்பான் மீன் போன்ற மீனினங்கள் அகப்பட்டதாகவும் தத்தம் தேவைக்கு மேலதிகமாக கிடைப்பவற்றை விற்பனை செய்தும் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்திய மக்களும் வாழ்ந்து வந்தனர்.

அத்துடன் மாரிகாலத்தில் தேங்கும் மழைநீரைக் கடத்து வதற்கேற்ற வகையில் அமைந்த வழிகளும் வாய்க்கால்களும் காணப்பட்டன. இருப்பினும் தற்போது நாகரீக வளர்ச்சியின் ஒரு கட்டமாக இத்துரவுகள் குளங்களில் பல நிரவப்பட்டுள்ளது. மூடப்பட்ட ஆண்டவன் குளம் (ஆண்டான்குளம்) மீண்டும் தூர்வாரப்பட்டு புதுப்பிக்கப்பட்டுள்ளது. மாண்டான்(மாண்டவன்குளம்) மூடப்பட்டநிலையில் உள்ளது இது அந்தியேட்டி கருமங்களை ஆற்றும் நீர்நிலையாக பயன்படுத்தப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

**வளர்ப்பு விலங்குகளும் காட்டு விலங்குகள் பறவைகளும்.**

இப்பகுதியில் உள்ள ஒவ்வொருவரது வீட்டிலும் ஆடு, மாடு, கோழி, நாய், பூனை என்பன வளர்க்கப்பட்டன. சில வீடுகளில் குதிரையும் வளர்க்கப்பட்டது. அதிகாலையில் மக்கள் துயிலெழுவது சேவல்களின் கூவல் ஓசையிலாகும். ஆந்தை, தேவாங்கு. மயில் , கௌதாரி , நீர்க்காகம் , கரிக்குருவி , காடை , கூகை, மணிப்புறா, ஆட்காட்டி, காகம், கிளி, குயில் போன்ற பறவைகளும் குருவியினங்களும் குரங்கு, மரநாய், தேவாங்கு, குளவிகள் கூடியொன்றாய் வாழ்ந்த இடமாகவும் கல்வயல் காணப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடு , பசுமாடு வண்டில் மாடு என்பவற்றை வளர்த்துத் தத்தம் உணவுத்தேவைக்கும் பயிர்ச்செய்கைக்கும் பயன்படுத்திய மக்கள் கல்வயல் பகுதியில் வாழ்ந்தனர்.

## குறிச்சிகளும் குடும்பப் பெயர்களும்.

கல்வயல் பகுதியில் ஆதியில் நான்கு குடிகள் வாழ்ந்து வந்தனர். அவையாவன புளிவளவார், பிலாவளவார், பனையிற்கீளார், வைரவன்கூட்டம் என்பனவாகும். இவர்கள் வாழ்ந்த பகுதியே ஆதிக் கல்வயல் கிராமமாகும். இவ் ஆதிக் குடிகளிடையே குடிமாறி பெண் எடுக்கும் முறை காணப்பட்டது. காலப்போக்கில் குடிகளின் வளர்ச்சியும் சைவபாரம்பரிய வாழ்வு விரும்பி இடம்பெற்ற குடியேற்றமும் கல்வயல் கிராமத்தை விரிவடையச் செய்தது. பிற்காலத்தில் விரிவடைந்த கல்வயல் பகுதி மாவளவார், பனைக்கீழார், பிலாவளவார், உலாந்தாவளவார், வாழைத் தோட்டத்தார், மானாவளையார், பனிக்கண்டியார், குருவிப்பிட்டியார், கற்குளியார், குழைக்கடையடியார், விளைவேலியார், வெற்றியாணார் என சிறு குறிச்சிகளாக யார் யார் எவரென்பதை அறிந்துகொள்ளக் கூடிய வகையில் அவர்கள் வாழ்ந்த இடங்களும் வளவுகளும் பெயர் கொண்டு அழைக்கப்பட்டன. அவ்வப் பகுதியில் வாழ்ந்த மக்கள் அக்குறிச்சிப் பெயரை அடைமொழியாகக் கொண்டு அழைக்கப்பட்டனர். உதாரணமாக மாவளவு அப்பாக்குட்டி வாத்தியார், வாழைத்தோட்டம் விநாயகமூர்த்தி, பனையிற்கீளார் ஆறுமுகத்தார் என்போரைக் குறிப்பிடலாம்.

## குடிப் பரம்பலும் தனித்துவமும்.

குடிப் பரம்பலிலும் ஒரு தனிச்சிறப்பான தன்மை கொண்டதாகக் கல்வயற்பதி விளங்கியது. தோட்டம், துரவு, வயல்வெளிகள் கொண்ட கமம் செய்வோர் - வேளாண்மை செய்வதினால் வேளாளர் என்று அழைக்கப்பட்டவர்கள் பெரும்பான்மையாக இங்கு வாழ்ந்து வந்தனர். இவர்களைத் தவிர அந்தணர்கள், இரும்புவேலை செய்வோர், மரவேலை செய்வோர், கட்டட நிர்மாணவேலை செய்வோர், கைவினைவேலைகள் செய்வோர், சலவைத்தொழில் செய்வோர், கள்ளிறக்கும் தொழில் செய்வோர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற பலவேலைகள் செய்கின்ற பலபிரிவு மக்கள் வாழ்ந்து வந்தனர். எனினும் ஏற்றத் தாழ்வு பாராமல் எல்லோரும் ஒற்றுமையாக பழகக் கூடிய- பழகிய படித்த பண்புடைய உறவுகளாக இங்குள்ள மக்கள் காணப்பட்டனர். சைவப் பிரகாச வித்தியாசாலை இதற்கோர் சிறந்த உதாரண நிலையமாகும். இங்கு அனைத்துப் பிரிவு மக்களும் ஒன்றாகக் கல்விகற்று டாக்டர்களாக, ஆசிரியர்களாக, பல்வேறு திறமைகளின் பங்குதாரர்களாக மாற்றிய பெருமை அப்போதிருந்த ஆசிரிய சமுக ஆர்வலர்கள் அளித்த பேறாகும்.

இனங்கள் இவ்வாறு இருந்தாலும் இவர்களுக்கிடையில் ஓர் அன்பான உறவு காணப்பட்டது. அனைவரும் அருகருகே தமக்கிடையே ஏற்றத்தாழ்வு இன்றிப் பழகியமை கல்வயலின் தனிச்சிறப்பாகும். தங்களுடைய இல்லங்களில் நல்லவை நடக்கும் வேளைகளில் எல்லோரையும் அழைத்து அன்னம், பலகாரம் வழங்கிய அன்பும் அரவணைப்பும் தனிச்சிறப்பாகும்.

அயலவர்கள் யாராக இருந்தாலும் ஒரு வீட்டில் துக்கநிலை இருந்து அவ்வீட்டில் சமைக்க முடியாத நிலை காணப்பட்டால் அவர்களுக்கு அன்னாகாரம் கொடுத்து ஆதரித்த பெருமை இங்குள்ள மக்களைச் சாரும்.

### வயல்வெளிகளும் பயிர்ச்செய்கையும்.

கல்வயல் கிராம அலுவலர் பிரிவினுள் பெருங்குளம், கிராம்புவில், கெருடாவில், மானாவளை, விளைவேலி என்னும் ஐந்து வயல் வெளிகள் காணப்படுகின்றன. இவற்றுள் பெருங்குளம், கிராம்புவில், விளைவேலி ஆகிய வயல்வெளிகளில் கோடைகாலங்களில் மரக்கறிப் பயிர்ச்செய்கையும் அத்துடன் சாமை, தினை, கொள்ளு, பயறு, உழுந்து, எள்ளு, கௌபி, குரக்கன் போன்ற சிறுதானியப் பயிர்ச்செய்கையும் கால்நடைகளின் தீவனத்திற்காகச் சணற் பயிர்ச்செய்கையும் இடம்பெற்றது. இங்கு விளைவிக்கப்படும் சணல் விதைகள், மற்றும் சணல்தடிகளை தென்பகுதியிலிருந்து வருகைதரும் வியாபாரிகள் பெற்றுச்செல்வதும் வழக்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாரிகாலத்தில் மானாவாரி நெற்செய்கையும் மேற் கொள்ளப்பட்டு வருகின்றது. கெருடாவில் மானாவளைப் பகுதிகளில் மரக்கறிப் பயிர்ச்செய்கை இடம்பெறுவதில்லை. பெருங்குளம் மற்றும் கிராம்புவில் பகுதிகளில் உள்ள வயல்களில் மரவள்ளி, வற்றாளை, பீற்றூட் போன்ற கிழங்குவகைகளும் கத்தரி, வெண்டி, பாகல், புடோல், பயற்றை, மிளகாய், கீரை, பூசணி போன்ற மரக்கறிகளும் விளைவிக்கப்பட்டன. இப்பகுதியில் விளையும் மரக்கறிகளுக்கும் கிழங்குகளுக்கும் சாவகச்சேரி, கொடிகாமம், நெல்லியடி, யாழ்ப்பாணச் சந்தைகளில் பெருங்கிராக்கி இருந்து வந்தது. இதனால் இப்பகுதி விவசாயிகள் பெரும் இலாபமீட்டி வந்தனர். ஆயினும் 2000 ஆம் ஆண்டில் இப்பகுதிகளில் பன்றிகளின் நடமாட்டம் அதிகரித்ததன் காரணமாக இக்கிழங்குப் பயிற்செய்கை தடைப்பட்டு விட்டது.

விளைவேலிப் பகுதி வயல் நிலங்கள் வெங்காயத்திற்கும், பூசணிக்கும் பெயர்பெற்று விளங்கியது. இங்கு வெங்காயத்துடன் ஏனைய பயிர்களும் தற்போது பயிரிடப்பட்டு வருகின்றது.

பெரும்பாலும் நெற்பயிர்ச் செய்கையிலும் மரக்கறிப் பயிர்ச்செய்கையிலும் இங்குள்ள மக்கள் கூட்டுச்சேர்ந்து கூலியின்றி வேலை செய்வர். இதனால் இவர்களுக்கு இலாபம் அதிகரித்துக் காணப்பட்டது. ஆயினும் நவீன இயந்திரங்களின் வருகையினாலும் இளைஞர்கள் வேறுதொழில்களை நாடிச்சென்றதாலும் இப்போது இப்பணிகள் அருகிவருகின்றதைக் காணக்கூடியதாகவுள்ளது.

## வாழ்வாதாரத் தொழில்கள்.

கல்வயல் பகுதியில் வாழ்கின்ற மக்களில் பெரும் பான்மையினர் தமது ஜீவனோபாயத் தொழிலாக விவசாயத்தையே மேற்கொள்கின்றனர். குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அளவிலானோர் அரசாங்க வேலையிலும் இன்னுஞ்சிலர் வியாபாரத் தொழிலும் செய்கின்றனர். அத்துடன் குடிசைக் கைத்தொழிலாக பன்னவேலை எனப்படும் பனையோலையிலான பெட்டி, கடகம், பாய், நீத்துப்பெட்டி, தொப்பி, மூடல்பெட்டி, நெற்கூடைகள், நார்க்கடகங்கள், தண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணீர்ப்பட்டைகள், உமல் போன்றவற்றை இழைத்து தத்தம் தேவைகட்குப் பயன்படுத்தியதோடு விற்பனையும் செய்து தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தி வந்தனர். இங்கு விளைவிக்கப்படும் நெல் மற்றும் சிறுதானியங்கள் இவர்களால் இழைக்கப்படும் கூடைகளிலேயே சேமித்து வைக்கப்படுவது வழக்கமாகும். தற்போது தத்தம் தேவைகளுக்காக மட்டும் செய்பவர்களாக அதுவும் வயது முதிர்ந்தவர்களாகவே காணப்படுகின்றனர். இளையோர்கள் இத்தொழிலில் நாட்டமற்றுக் காணப்படுவதனால் இன்னுஞ்சில காலத்தில் இத்தொழில் முற்றாக அற்றுப்போகக் கூடிய நிலையே காணப்படுகின்றது.

அத்துடன் பனைவளம் நிறைந்த பதியாகவும் காணப் பட்டதால் பனைமரத்திலிருந்து கிடைக்கப்பெறும் பனம்பழங்களைப் பயன்படுத்திப் பனாட்டு உற்பத்தியிலும் பனங்கிழங்கு, ஒடியல், புழுக்கொடியல் தயாரிப்பதிலும் இப்பகுதி மக்கள் கைதேர்ந் தவர்களாக மிளிர்ந்தனர். தத்தமது தேவைக்கு அப்பால் எஞ்சியவற்றைச் சந்தைப்படுத்தித் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தியும் வந்தனர்.

மேலும் இங்கு ஒரு நெசவுசாலை தென்மராட்சிப் பிரதேச செயலகத்தால் நடாத்தப்பட்டு வந்தது. கல்வயல் சண்முகானந்தா வீதியில் அமைந்திருந்த இந்நெசவுச்சாலையில் பயிற்றப்பட்ட நெசவு ஆசிரியையினால் நெசவுப் பாடம் போதிக்கப்பட்டு வந்தது. பல இளம்பெண்கள் இங்கு பயிற்சிபெற்று தத்தம் வீடுகளில் நெசவுத்தறிகளைப் பொருத்தி சேலைகள், படுக்கை விரிப்புகள், போன்ற இன்னோரன்ன கைத்தறி ஆடைகளை நெய்து விற்பனை செய்து தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தி வந்தனர்.

இருப்பினும் தென்மராட்சிப் பகுதியில் 2000 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பாரிய யுத்தம் காரணமாக இந்நெசவுச்சாலை முற்றாக அழிவடைந்து தற்போது வெற்றுக் காணியாகக் காணப்படுகின்றது. நவீன தொழிநுட்ப சாதனங்களின் வருகையினால் தற்போது இக் கைநெசவுத் தொழில் அற்றுப்போயுள்ளதும் கண்கூடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலயங்களும் வழிபாட்டு முறைகளும்

கல்வயல் கிராமத்தில் வாழ்கின்ற மக்களில் பெரும் பான்மையோர் சைவசமயத்தைப் பின்பற்றுபவர்களாகக் காணப் படுகின்றமையால் இங்கு இந்து ஆலயங்கள் மட்டுமே அமைந் துள்ளன. சிறுபான்மையாக கிறிஸ்தவ சமயத்தைப் பின்பற்றும் மக்கள் வாழ்ந்தாலும் அம்மத ஆலயங்கள் எவையும் இப்பகுதியில் இல்லை.

இவ்வாலயங்களில் ஆகமஞ்சார்ந்த வழிபாட்டு முறைகளைக் கொண்டுள்ள ஆலயங்களும் ஆகமஞ் சாராத கிராமிய வழிபாட்டு முறைகளைக் கொண்ட ஆலயங்களும் அமைந்துள்ளன. வரலாற்றுப் புகழும் தொன்மையும் கொண்டவையாக இவ்வாலயங்கள் விளங்குகின்றன.

### I. ஆகமஞ்சார்ந்த வழிபாட்டு முறையுள்ள ஆலயங்கள்.

1. கல்வயல் வேதவனப் பிள்ளையார் ஆலயம்.
2. பெருங்குளம் அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலயம் (பெருங்குளம் பிள்ளையார்)
3. விளைவேலி மருதடிப் பிள்ளையார் ஆலயம்.
4. கல்வயல் ஆயிலடி வீரகத்திவிநாயகர் ஆலயம் (புலுட்டையன் பிள்ளையார்)
5. கல்வயல் சித்தன்மாவடிப் பிள்ளையார் ஆலயம்.
6. விளைவேலி துர்க்கையம்மன் ஆலயம்
7. கெருடாவில் கந்தசுவாமி ஆலயம்
8. கல்வயல் ஐயனார் ஆலயம்
9. மானாவளை ஸ்ரீ வாலாம்பிகை அம்மன் ஆலயம்

### II. ஆகமஞ்சாராத கிராமிய வழிபாட்டு முறையுள்ள ஆலயங்கள்.

1. பெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. கல்வயல் வில்வத்து பைரவர் ஆலயம்.
3. கல்வயல் பழந்தோட்ட பைரவர் ஆலயம்
4. கல்வயல் குழைக்காட்டு பைரவர் ஆலயம்
5. கல்வயல் அண்ணமார் ஆலயம்.
6. மானாவளை குருவிப்பிட்டி பைரவர் ஆலயம்.
7. கல்வயல் பனிக்கண்டிக் காளியம்மன் ஆலயம்

இவற்றுடன் ஆங்காங்கே இன்னுஞ்சில ஆகமஞ்சாராத சிற்றாலயங்களும் உள்ளன. ஆகமஞ் சார்ந்த வழிபாட்டு முறையுள்ள ஆலயங்களில் நித்திய நைமித்திய பூசைகள் தேர்ச்சிபெற்ற அந்தணக் குருமார்களினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பெரும்பாலான ஆலயங்களில் இருகாலப் பூசையே நடைபெறுகிறது. இவற்றுள் வேதவனப் பிள்ளையார் ஆலயம் மற்றும் ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலயம் என்பவற்றில் அழகிய இராஜகோபுரங்களும் அமைந்துள்ளன. இவற்றில்

1. பெருங்குளம் அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலயம்.
2. கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலயம்.
3. விளைவேலி துர்க்கை அம்மன் ஆலயம்.
4. விளைவேலி மருதடி விநாயகர் ஆலயம்.
5. கெருடாவில் கந்தசுவாமி ஆலயம்.

ஆகிய ஆலயங்களில் மஹோற்சவம் என அழைக்கப்படும் கொடியேற்றத்துடனான வருடாந்தப் பெருந்திருவிழாக்கள் நடைபெற வேதவனப் பிள்ளையார் ஆலயத்தில் சாந்தீக மஹோற்சவம் என்று அழைக்கப்படும் அலங்கார உற்சவமும் இடம்பெறுகின்றது.

கிராமிய வழிபாட்டு முறையிலமைந்த ஆகமஞ்சாராத வழிபாட்டு முறையிலுள்ள ஆலயங்களில் அந்தணரல்லாத பூசாரிமார் பூசைகளைச் செய்கின்றனர். இவற்றுள் அநேகமான ஆலயங்கள் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் மட்டும் விளக்குவைத்தல் என்னும் நடைமுறையைக் கொண்டவை. சிலவற்றில் நித்திய பூசையும் இடம் பெறுவதுண்டு. இவ்வாலயங்களில் வருடத்திற்கு ஒருதடவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டமெடுத்தல், பொங்கல், மடைவைத்தல், வழிவெட்டுதல் போன்ற பாரம்பரிய சடங்குகளும் இடம்பெறுகின்றன.

பாடசாலைகளும் முன்பள்ளிகளும்.

கல்வயல் பிரதேச எல்லைக்குள் இரண்டு பாடசாலைகளும் கிழக்கு எல்லையோரமாக மண்டுவில் கிராம அலுவலர் பிரிவில் ஒரு பாடசாலையும் இயங்கி வந்தன. கல்வயல் சைவப்பிரகாச வித்தியாசாலை (பழைய பாடசாலை அல்லது நெல்லியடிப் பாடசாலை), கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாசாலை என்பன கல்வயல் எல்லைப் பரப்பினுள்ளும் கெருடாவில் சரஸ்வதி வித்தியாசாலை கல்வயலின் எல்லையோரமும் அமைந்திருந்தன. இவற்றுள் கெருடாவில் சரஸ்வதி வித்தியாசாலை, கல்வயல் சைவப்பிரகாச வித்தியாசாலை என்பன யுத்தகாலச் சூழ்நிலையால் அழிவடைந்தமையாலும் மாணவர்கள் நகரப்புறப் பாடசாலைகளை நாடியமையாலும், மக்கள் தொகை வீழ்ச்சியாலும் மூடப்பட்டுவிட்டன. கல்வயல் சைவப்பிரகாச வித்தியாலயம் தென்மராட்சியில் தொடங்கப்பெற்ற மூன்றாவது பாடசாலை என்பது குறிப்பிடத்தக்கது. இப்பாடசாலை ஆரம்பிப்பதற்கு உலாந்தா பொன்னையா என்பவருடைய காணியைக் கொள்வனவு செய்து சைவப்பிரகாச வித்தியாசாலை என்னும் பெயரில் பாடசாலையை நிறுவி நடாத்தினர்.

பல கல்விமான்கள், கவிஞர்கள், பிரபல அரச நிர்வாகிகள், புராணிகர்கள் போன்ற பலரை உருவாக்கிய பெருமை இப்பாடசாலைக்கே உரியது. அந்த வகையில் பண்டிதர் க.வேலுப்பிள்ளை, கவிஞர் இ.முருகையன், திருக்கணித பஞ்சாங்க கணிதர் கலாபூஷணம் சி.சிதம்பரநாதக்குருக்கள், டாக்டர் பேதுரு பிலிப்ஸ் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

கல்வயலில் சைவப்பிரகாச வித்தியாசாலை என்னும் பெயரில் ஒரு பாடசாலை இயங்குவதை அறிந்து ஆறுமுக நாவலர் அவர்கள் இப்பாடசாலைக்கு வருகை தந்து மக்களது முயற்சியைப் பாராட்டி கரும்பலகை ஒன்றை அன்பளிப்புச் செய்தமை சிறப்புக்குரிய விடயமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வயலில் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாசாலை மட்டும் தற்போது இயங்குகின்றது. 1930 ஆம் ஆண்டு திரு.வைத்திலிங்கம் விநாயகமூர்த்தி அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் வேதாந்த மடத்தைச் சேர்ந்த ஸ்ரீமான் மகாதேவ சுவாமிகள் சண்முகானந்த வித்தியாசாலை எனப் பெயர்சூட்டியதாகவும் அறியமுடிகின்றது. இப்பாடசாலை 1962 ஆம் ஆண்டுவரை சைவவித்தியாவிருத்திச் சபையின் நிர்வாகத்திலும் அதன்பின்னர் இலங்கை அரசின் நிர்வாகத்திலும் இயங்குகின்றது. இது ஒரு 3ஆம் தரப் பாடசாலையாகும். இங்கு தரம் 3இல் உள்ள ஒரு அதிபரும் 7 ஆசிரியர்களும் கடமை யாற்றுகின்றனர். தரம் 1 தொடக்கம் 5 வரையான வகுப்புகளில் சுமார் 148 வரையான மாணவர்கள் கல்விகற்று வருகின்றனர். வருடாந்தம் கணிசமான அளவு மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைவதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் கல்வயல் கிராமத்தினுள் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாசாலைக்கு எதிரில் கல்வயல் ஐக்கிய நாணய சங்கத்திற்குரிய காணியில் அமைந்துள்ள பொதுநோக்கு மண்டபத்தில் டேனிஜா மழலைகள் கல்விப் பூங்கா என்னும் முன்பள்ளி ஒன்று தற்போது இயங்கி வருகின்றது. இதற்கு முன்னர் சைவப்பிரகாச வித்தியா சாலையில் ஒரு முன்பள்ளியும், உலாந்தா வளவில் ஒரு முன்பள்ளியும், சண்முகானந்தா வித்தியாசாலைக்கு அருகில் மோகனா மற்றும் மதுரவாணி ஆகியோரினால் ஒரு முன்பள்ளியும், செல்வி க. சிவபாக்கியம் அவர்களினால் ஒரு முன்பள்ளியும் கண்ணன் பாலர் பாடசாலை என ஒரு முன்பள்ளியும் இயங்கி வந்ததாக அறிய முடிகின்றது. மேலும் அப்பாக்குட்டி நடராசா அவர்களின் வீட்டில் அவரது புதல்வி திருமதி நா. ஜெயசுந்தரி அவர்களினால் ஒரு முன்பள்ளியும் இயக்கப்பட்டு வந்ததாகவும் அறிய முடிகின்றது. எனினும் இவை காலமாற்றத்தால் இன்று செயலிழந்து போயுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறநெறிப் பாடசாலை.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் எண்ணக் கருவுக்கு அமைய கல்வயல் பகுதியிலும் ஓர் அறிநெறிப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் அறநெறிப்பாடசாலை என்னும் பெயருடன் 2015 ஆம் ஆண்டுமுதல் இயங்கும் இப்பாடசாலையில் சுமார் ஐம்பதிற்கும் மேற்பட்ட மாணவர்கள் அறநெறிக் கல்வியைப் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. மாணவர்கள் தீய வழியிற் செல்லாமற் தடுப்பதற்கும் ஆலயத்தின்பால் ஈர்ப்பதற்கும் இந்த அறநெறிப் பாடசாலை உதவும் என்பதில் ஐயமில்லை.

சனசமூக நிலையங்களும் வாசிகசாலைகளும்.

கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாசாலைக்கு அருகில் கல்வயல் சமூக சேவா சங்கமும் கலைமகள் வாசிக சாலையும் 80 வருடங்களுக்கு மேலாகவும், பெருங்குளம் வயற்கரையோரமாக பாரதி படிப்பகமும் இயங்கி வருகின்றன. இவை இங்குள்ள மக்களுக்கு பத்திரிகைகள் வாசிப்பதற்குத் துணையாகவுள்ளன. அத்துடன் தற்போது கல்வயல் வேதவனப் பிள்ளையார் ஆலய அன்னதான மண்டபத்தில் பண்டிதர் படிப்பகம் என்னும் பெயரில் ஒரு வாசிகசாலையும் இயங்கிவருகின்றது.

கல்விமான்களும் கலைஞர்களும்.

இப்பிரதேசத்தில் புகழ்பெற்ற கல்விமான்கள், கலைஞர்கள் வாழ்ந்து வந்துள்ளனர். தற்போதும் வாழ்கின்றனர். பண்டிதர்கள், புலவர்கள், வித்துவான்கள், இசைப் பேரறிஞர்கள் என இவர்களின் பட்டியல் நீண்டு கொண்டே செல்லும். இவர்களில் பண்டிதர் க. வேலுப்பிள்ளை, பண்டிதர் க. சங்கரப்பிள்ளை (இருவரும் சகோதரர்கள்), வித்துவான் வே. ஆறுமுகம், கவிஞர்களான இ. முருகையன், இ. சிவானந்தன் (இருவரும் சகோதரர்கள்), தா. இராமலிங்கம், புலவர் வே. குமாரசாமி, கவிஞர் ச. முருகையா (முருகு), கவிஞர் செ. சுதாகரன் (வயலூரான்) போன்றோரும் இசைத்துறையில் சங்கீதபூஷணம் சி. விநாசித்தம்பி, இசைமணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோகனாம்பிகை கணேசன் போன்றோர் கல்வயலுக்குப் பெருமை சேர்த்து இன்று இறையடியில் இன்பம் காண்கின்றனர். இவர்களுடன் ஓய்வுநிலை இசை ஆசிரியை திருமதி சுந்தரவல்லி ஆனந்தராஜா, திருமதி கிருபாசக்தி கருணா ( முதுநிலை விரிவுரையாளர், இசைத்துறை ,யாழ் பல்கலைக்கழகம்) மற்றும் திருமதி சுபத்திராதேவி ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோர் இன்றும் இசைப்பணி செய்து வருகின்றனர். சங்கீதம், வாத்திய இசைகளைக் கற்பிப்பதிலும் பண்ணிசை ஓதுவதிலும் இவர்கள் புகழ்பெற்று விளங்குகின்றனர். நடனத்துறையில் திருமதி மிர்ணாளினி ஜெயமோகன் அவர்கள் புகழ்பெற்று விளங்கித் தற்போது புலம்பெயர் தேசத்திலும் அப்பணியைத் தொடர்ந்து சிறப்புடன் மிளிர்கிறார்.

### சோதிடமும் குருத்துவமும்.

கல்வயல் பகுதியில் குருத்துவப் பணியில் சிறந்து விளங்கிய பல சிவாச்சார்யர்கள் வாழ்ந்து கல்வயலுக்குப் பெருமை சேர்த்துள்ளனர். சேர்த்துக் கொண்டுமுள்ளனர். இவர்களில் சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக் குருக்கள், சிவஸ்ரீ செ. பரமானந்தக் குருக்கள், சிவஸ்ரீ ப. கிருஸ்ணமூர்த்திக் குருக்கள், சிவஸ்ரீ ப. சுப்பிரமணியக் குருக்கள், சிவஸ்ரீ சி. கிருபாகரக் குருக்கள் சிவஸ்ரீ தெய்வேந்திரக் குருக்கள் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இவர்களில் சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக் குருக்கள் அவர்கள் சோதிட விற்பன்னராகத் திகழ்ந்ததோடு உலகப் புகழ்பெற்ற திருக்கணித பஞ்சாங்கத்தைக் கணித்து வெளியிட்டு வந்ததோடு திருமணப் பொருத்தம் பார்த்தல், ஜாதகம் கணித்தல், ஜாதகப் பலன்கள் கூறுதல், வீட்டிற்கு நிலையம் எடுத்தல் போன்ற பணிகளையும் செய்துவந்தார். அத்துடன் சோதிடம் சம்பந்தமான நூல்களையும் பல கட்டுரைகளையும் எழுதி வெளியிட்டுமுள்ளார். இவரது சோதிடத் திறமையைக் கௌரவிக்குமுகமாக இலங்கை அரசினால் சோதிடத் துறைக்கான **கலாபூஷணம்** விருது வழங்கிக் கௌரவிக் கப்பட்டார். இவரது திருக்கணித நிலையம் மட்டுவில் பகுதியில் இயங்கினாலும் அதுவும் கல்வயல் எல்லையோரமாகவே இயங்கியமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது மறைவிற்குப் பின்னர் இவரது சோதிடப் பணியைத் தலைமகனான சிவஸ்ரீ சி.ஜெகதீஸ்வர சர்மா அவர்கள் தலைநகர் கொழும்பில் இருந்து மேற்கொள்ள இரண்டாவது மகன் சி.சண்முகானந்த சர்மா அவர்கள் இங்கிருந்து இப்பணியை மேற்கொள்கின்றார். குருத்துவப் பணியை சிவஸ்ரீ சி.கிருபாகரக் குருக்கள் மேற்கொள்கின்றார்.

## புராணபடனமும் பௌராணிகர்களும்.

தென்மராட்சிப் பகுதியில் கல்வயல், மட்டுவில், சரசாலை, மீசாலைப் பகுதியில் உள்ள ஆலயங்களில் தொடர்ச்சியாகப் புராணபடனங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. கல்வயல் வேதவனப் பிள்ளையார் ஆலயம், பெருங்குளம் அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலயம் என்பவற்றில் முறைப்படியாக பெரியபுராணம், கந்தபுராணம். திருவிளையாடற்புராணம், திருவாதவூரடிகள் புராணம் என்பன காப்புக்கட்டி தேர்ச்சிபெற்ற பௌராணிகர்கள் ஓதி வந்தனர். குறித்த ஒரு புராணம் தொடங்கினால் அது முடியும்வரை காப்புக்கட்டி ஓதத் தொடங்கியவர்கள் ஊரைவிட்டு நகராமல் ஆசாரசீலர்களாக இருந்து இப்புராண படனத்தைச் செய்துவந்தனர். ஒருவர் புராணத்தில் உள்ள பாடல்களை இராகத்தோடு பாட இன்னொருவர் அதற்குரிய பொருளினை இராகத்தோடு உரைப்பார். இது பயன் சொல்லல் எனப்படும். ஏராளமான அடியவர்கள் ஆலயத்தில் தங்கியிருந்து புராண படனத்தைச் செவிமடுப்பர். இதன் காரணமாக மக்கள் மத்தியில் ஒழுக்கமும் சமய நம்பிக்கையும் மொழிப்புலமையும் பெருகியிருந்தது. அத்தோடு முக்கியமான கட்டப் படிப்பு நடைபெறும் காலங்களில் அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டு வந்தமை சிறப்பம்சமாகும்.

ஆயினும் இயந்திரத்தனமான வாழ்க்கை முறைக்குள் சிக்குண்டதனால் இவ்வாறான புராண படனங்கள் தற்போது அருகிவிட்டன. படிப்போரும் இல்லாமல் கேட்போரும் இல்லாமல் இச்செயற்பாடு இப்பொழுது அற்றுப்போய்விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வயல் என்னும் இப்பழம்பெரும் பதியில் திரு. சி. அப்பாக்குட்டி அவர்கள், திரு. க. வாரித்தம்பி அவர்கள், பண்டிதர் திரு. க. வேலுப்பிள்ளை அவர்கள், பண்டிதர் திரு. க. சங்கரப்பிள்ளை அவர்கள், சங்கீதபூஷணம் திரு. சி. விநாசித்தம்பி அவர்கள், திரு. கு. வீரசிங்கம் அவர்கள், திரு. அ. நடராசா அவர்கள், திரு. வே. சின்னத்துரை அவர்கள், பொருக்கர் அப்பாக்குட்டி அவர்கள், திரு. வா. கதிரேசபிள்ளை அவர்கள், திரு. சி. கைலாயபிள்ளை அவர்கள், திரு. தம்பிப்பிள்ளை (வரிச்செல்லையா) அவர்கள் போன்றோர் பௌராணிகர்கள் என புகழ்பெற்றவர்கள்.

இவர்களைவிட அயலூர்களிலிருந்தும் பௌராணிகர்கள் வந்து இவ்வூர் ஆலயங்களில் இடம்பெறும் புராணபடன நிகழ்வுகளில் கலந்து கொள்வதும் இங்குள்ளவர்கள் அயலூர் ஆலய நிகழ்வு களில் கலந்து கொள்வதும் வழக்கமாகும்.

இவர்களில் சி.அப்பாக்குட்டி அவர்கள் சாவகச்சேரி வாரிவனநாத சிவன் ஆலயத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் அகில இலங்கை வானொலியினரால் **"அகில இலங்கைப் புராண மேதை"** எனப் பட்டஞ் சூட்டிப் பொன்னாடை அணிவித்துக் கௌரவிக்கப்பட்டமை சிறப்பாகும். புராணபடன பாரம்பரியத்தில் அப்பாக்குட்டியர் பாணி என்பது தனித்துவமானது என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் இவர் எந்தவொரு பாடசாலையிலோ குருவிடமோ கற்காத போதிலும் தனது சொந்த முயற்சியால் பண்ணிசையோதல், புராண படனஞ் செய்தல் என்பவற்றில் சிறந்தவராக விளங்கியதோடு தனது வீட்டுத் திண்ணையில் ஒரு திண்ணைப்பாடசாலை அமைத்து கல்வயல் மற்றும் அயலூரிலிருந்து வருகை தந்த மாணவர்களுக்கு இவற்றைப் போதித்தும் வந்துள்ளார். இதன் காரணமாக இவர் வாத்தியார் என ஊரவர்களால் சிறப்பித்து அழைக்கப்பட்டார். அயலூர்களில் இடம்பெறும் புராணபடன நிகழ்வுகளுக்கு மாட்டுவண்டில் கட்டி இவரை அழைத்துச் சென்று புராணபடனஞ் செய்வித்துக் கௌரவித்து அனுப்புவதும் அறியக் கூடியதாகவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருகிப் போனவை

கல்வயல் கிராமத்தில் வாழ்ந்த மக்கள் ஆதிகாலத்தில் பெரும்பாலும் கால்நடையாகவே தமது பயணங்களை மேற்கொண்டு வந்தனர். இவர்களுக்காகவே ஆங்காங்கே சுமைதாங்கிகளும் , பொதுக்கிணறுகளும் , தங்குமடங்களும் இருந்தன. இவை தற்போது அழிக்கப்பட்டும் அழிவடைந்தும் விட்டன.

தலைச்சுமையுடன் நீண்டதூரம் செல்பவர்கள் களை தீர சுமைதாங்கிகள் வீதியோரங்களில் அமைக்கப்பட்டது. இது உயர்வான புண்ணியகாரியமாக எமது மக்களின் மரபாக பேணப்பட்டு வந்தது. கர்ப்பிணிப் பெண்கள் மரணமடைந்தால் அவர்களின் ஞாபகார்த்தமாகவும் அவ்விரு உயிர்களுக்கும் நற்கதி வேண்டியும் சுமைதாங்கி அமைப்பது வடபகுதி தமிழரின் மரபாக பேணப்பட்டு வந்தது. போக்குவரத்து வசதிகள் பெருகி கால்நடையிலான பிரயாணம் அருகியமை சுமைதாங்கி மரபு அற்றுப்போக காரணமாகிவிட்டது.

அத்துடன் மானாவளை இல்வாரைப் பகுதியில் மாட்டுவண்டில் சவாரித்திடல் ஒன்றும் காணப்பட்டது. இங்கு விசேட தினங்களில் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டிகள் நடத்தப்பட்டு வந்தது. எனினும் இவ்வழக்கமும் தற்பொழுது அருகிவிட்டது.

உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே என்னும் முதுமொழிக்கிணங்க இங்கு வாழும் மக்களின் வீடுகளில் எப்போதும் மேலதிகமாக இருவருக்கேனும் உணவு சமைத்து வைத்திருப்பர். எதிர்பாராத வேளைகளில் வருவோர்க்கு உணவு கொடுத்து உபசரிக்கும் பழக்கமும் மேலோங்கியிருந்தது. இவ்வழக்கமும் கால மாற்றத்தால் அருகியுள்ளதைக் காணக்கூடியதாகவுள்ளது.

ஊரவர் வீடுகளில் இடம்பெறுகின்ற மங்கல , அமங்கல நிகழ்வுகளிற்குத் தம்மாலான , தம்மிடமுள்ள அரிசி, தேங்காய் , மரக்கறி , நெல் , தானியவகைகள் என்பவற்றைக் கொடுத்துத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தத்தம் உறவைப் பலப்படுத்தியும் வந்தனர். எனினும் தற்போது இப்பழக்கமும் அற்றுப் போய்விட்டதைக் காணக் கூடியதாகவுள்ளது.

நிறைவுரை.

தென்மராட்சியின் தொன்மைப் பதிகளில் ஒன்றான கல்வயற் கிராமம் நாற்புறமும் வயல்வெளிகளும் மரங்கள், செடிகள், கொடிகள் நிறைந்ததாகவும் ஆலயங்கள் பெருகியுள்ளதாகவும் வனப்புடன் திகழ்கிறது. நாகரீக வளர்ச்சி ஏற்பட்டாலும் இன்னும் பழமை மாறாத பண்புடன் சைவப்பாரம்பரியத்தைப் பேணிவாழும் மக்கள் நிறைந்த பதியாகவும் விளங்குகின்றது. இப்பதி பற்றிய **"கவினுறு கல்வயல்"** என்னும் இந்நூல் 2022 ஆம் ஆண்டு கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலய இராஜகோபுர குடமுழுக்குவிழாச் சிறப்பு மலரில் வெளியான எனது கட்டுரையின் புதுக்கிய வடிவமாகும். எனது தந்தையாரின் 31 ஆம் நாள் ஞாபகார்த்தமாக வெளியிடப்பெறும் இந்நூலுக்கு மேலதிக தகவல்களை வழங்கியுதவிய இளைப்பாறிய அதிபர் கல்வயல் திரு. க. கதிரேசு அவர்களுக்கும் யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர் திரு. ந. சர்வேஸ்வரன் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். இத்தகைய சிறப்புகள் மிக்க கல்வயல் பதியானது மேலும் மேலும் பல அபிவிருத்திகளைக் கண்டு காசினியில் கவினுறு பதியாக மிளிர அனைவரதும் பங்களிப்பும், ஒத்துழைப்பும் அவசியமாகும்.

நன்றி.

**செ. சுதாகரன்,**
கல்வயல்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







திருக்கணிதம் சாவகச்சேரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org